**கிண்ணியா பிரதேச சபை - 2023**

-----------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள் -

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கிண்ணியா பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வரவு செலவுக் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 172 (1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கிண்ணியா பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், உள்ளுராட்சி நிறுவனத்திற்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நான் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என நான் நம்புகின்றேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

---

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான

கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழே குறிப்பிட்ட தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) பிரதேச சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட 1.6.1 (ஈ) சிபார்சுகளானவை சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் பால் விற்பனை நிலையத்திற்கு சபையினால் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 4,883,800 பெறுமதியான இயந்திரங்கள், அதனோடு இணைந்த 07 உபகரணங்கள், 32 கதிரைகள் மற்றும் 08 மேசைகள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை | மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் நிதிக்கூற்றில் உள்ளடக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | உள்ளூராட்சி அபிவிருத்தி உதவி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 19,195,229 செலவில் நிர்மாணிக்கப் பட்டு மீளாய்வாண்டில் பூர்த்தியாக்கப் பட்ட சந்தைக் கட்டடத்தொகுதியின் பெறுமதிகள் நிதிக்கூற்றுக்களில் ரூபா 16,034,269 தொகையாக காட்டப்பட்டிருந்தது. | பதில் வழங்கப்படவில்லை | சந்தைக் கட்டடத் தொகுதியில் உண்மைப் பெறுமதி நிதிக்கூற்றில் உள்ளடக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் சமப்படுத்துவதற்க்காக திரண்ட நிதிக் கணக்கில் வரவு வைக்கப்பட்ட ரூபா 1,884,613 இனங்காணப்படாத மீதியினை இனங்கண்டு சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை | காரணங்களை இனங்கண்டு சீராக்கம் செய்யப்படல் வேண்டும். |
| (ஈ) | 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளிற்க்கு மின்சார சபைக்கு செலுத்த வேண்டிய வீதி விளக்குகளுக்கான மின்சாரக் கட்டணம் ரூபா 1,002,528 தொகை நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்க வில்லை. | பதில் வழங்கப்படவில்லை | ஐந்தொகையில் செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவாக காட்டப்படல் வேண்டும். |
| (உ) | 2021 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 199,500 பெறுமதியான கண்காணிப்புக் கமராக்களின் பெறுமதிகள் நிதிக்கூற்றுக்களில் நிலையான சொத்தின் கீழ் முன்கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. மேலும், இக் கண்காணிப்புக்கமராக்கள் பௌதீக ரீதியாக சபையில் காணப்படாமையும் குறிப்பிடத்தக்கது. | பதில் வழங்கப்படவில்லை | கண்காணிப்புக் கமரா சொத்துக்களில் உள்ளடக்கப்படல் வேண்டும். |

### 1.6.2 கணக்கிணக்கம் செய்யப்படாத வேறுபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| சபையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு கடன்கொடுத்தோர் மீதிக்கும் பதிவேடுகளிலுள்ள நேரொத்த மீதிகளுக்குமிடையே ரூபா 2,384,918 தொகையான வேறுபாடொன்று காணப்பட்டிருந்தது. | பதில் தரப்படவில்லை. | வேறுபாடுகளை இனங்கண்டு சீராக்கம் செய்யப்படல் வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்காக எழுத்து மூலச்சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| நிலையான சொத்துக்கள் கூட்டுப் பெறுமதி ரூபா 29,879,572 தொகையான 04 கணக்கு விடயங்களிற்குரிய சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | தங்களினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள ஆவணங்களை அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | ஆவணங்கள் பெற நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |

### 1.7 இணக்கமின்மைகள் -

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள் -

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571(1), (2),(3) | இரண்டு ஆண்டுகளிற்கு மேற்பட்ட ரூபா 2,860,360 தொகை காலம் கடந்த வைப்புக்கள் தொடர்பில் சபை உரிய நபர்களுக்கு திருப்பிக் கொடுக்கவோ அல்லது வருமானக் கணக்கிற்கு மாற்றுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காலம் கடந்த வைப்புக்கள் தொடர்பில் உரிய நடவடிக்கை மேற்கொள்ப்பட்டு வருகின்றது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 7,753,225 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 4,257,574 ஆகும்.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பன

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர்31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிட ப்பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | - | - | - | - | 50,000 | - | - | - |
| (ii) | வாடகை | 8,375,000 | 14,757,000 | 5,154,000 | 9,603,000 | 8,475,000 | 8,475,000 | 3,034,000 | 7,382,000 |
| (iii) | உத்தரவுப்பத்திரக் கட்டணம் | 2,645,000 | 3,245,000 | 1,118,000 | 2,127,000 | 1,740,000 | 1,740,000 | 1,140,000 | 600,000 |
| (iv) | ஏனைய வருமானம் | 22,112,000 | 22,112,000 | 3,081,000 | 7,382,000 | 24,357,000 | 24,357,000 | 11,255,000 | 7,382,000 |
| | கூட்டுத் தொகை | 33,132,000 | 40,114,000 | 9,353,000 | 19,112,000 | 34,622,000 | 34,572,000 | 15,429,000 | 15,364,000 |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதி திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய குத்தகை வாடகை ரூபா 7,382,901 நிலுவையொன்று 02 இற்கும் 05 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலவீச்சிலும் காணப்பட்டிருந்தது. | நிலுவைத்தொகை முறையாக பரிசீலித்து விட்டொழிப்பு செய்வதற்கான சபைத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. | நிலுவைகள் தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளப் பட வேண்டும் |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | பாதுகாப்புவைப்பு மற்றும் கேள்விவைப்புக் கணக்குகளில் காணப்பட்ட ரூபா 2,528,013 தொகையான 38 வைப்புக்கள் குறித்த வைப்பாளர்களுக்கு மீளச் செலுத்தப்படாத போதிலும் வைப்புக் கணக்குப் பட்டியலிலிருந்து அக் குறிப்பிட்ட தொகைகள் அங்கிகாரமின்றி நீக்கப்பட்டிருந்தன. | பதில் வழங்கப்படவில்லை. | வைப்புக் கணக்குகள் தொடர்பில் உரிய முறையில் ஏடுகள் பேணப்படல் வேண்டும். |
| (ஆ) | 2022 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 2,150,000 பெறுமதியான சேதனை பசளை தயாரிக்கும் 03 இயந்திரங்களினை சேதனை பசளை உற்பத்தி செயற்பாட்டில் ஈடுபடுத்துவதற்க்கு முறையான வேலைத்திட்டமொன்றை ஆரம்பிப்பதற்க்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தனியார் அல்லது சங்கங்கள் மூலம் கேள்வி மனு கோரப்பட்டு உரமாக்கல் செயற்பாடுகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது | பசளை தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |

**3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்தமான 06 வாகனங்களினை திருத்தம் செய்து மீளப் பயன்படுத்துவதற்கு அல்லது அவற்றினை ஏலத்தில் விற்பனை செய்வதற்கு 19 வருடங்களுக்கு மேலாக சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | இவ் விடயம் தொடர்பாக எம்மால் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டு வருகின்றது. | உரிய மாற்று நடவடிக்கையினை துரிதப்படுத்தப்பட வேண்டும் |
| (ஆ) | 2016 ஆண்டில் ரூபா 897,155 செலவில் உப்பாறு பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட பல்தேவை கட்டடம் 08 ஆண்டுகளாக அதனை பயன்படுத்துவதற்க்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபையினால் கையகப் படுத்தப்பட்டுள்ளதுடன் இது விடயம் தொடர்பாக நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றோம். | கட்டிடத்தினை பயன்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2022 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 410,000 பெறுமதியான தும்பு தயாரிக்கும் இயந்திரம் எந்தவித பயன்பாடுகளின்றியும் சபையின் களஞ்சிய அறையில் விளைவற்று காணப்பட்டிருந்தது. | தனியார் அல்லது சங்கங்கள் மூலம் கேள்விமனு கோரப்பட்டு உரமாக்கல் செயற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | இயந்திரத்தினை பயன்படுத்தி உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |

**3.3 மனித வளங்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| ஆரம்பநிலைமட்டத்தில் 05 பதவி வெற்றிடங்களும் இரண்டாம் நிலை மட்டத்தில் 06 பதவி வெற்றிடங்களுமாக மொத்தமாக 11 வெற்றிடங்களை நிரப்புவதற்க்கு நடவடிக்கைகள் எடுக்கப் படாமையினால் சபையினால் பொது மக்களுக்கு வழங்கப்படும் சேவைகள் பலவீனமான முறையில் காணப்பட்டிருந்தன. | வெற்றிடம் தொடர்பாக எம்மால் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதோடு இரண்டாம் நிலை மட்ட பதவி வெற்றிடங்கள் தற்போது நிரப்பப்பட்டுள்ளது. | தீர்வு செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்**

**4.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| 1971 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோளாக நான்கு இலக்குகளை இனங்காணப்பட்டிருந்ததுடன், பௌதீக ரீதியாக அடைந்து கொள்ளக் கூடியவாறு திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | குறிக்கோள்களை அடையக்கூடிய திட்டம் தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் எம்மால் மேற்கொள்ளப் பட்டு வருகின்றது. | நிலைபேறான இலக்கு அடைய திட்டம் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |